செய்தி வெளியீடு எண்: 581 நாள்:10.09.2019

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், வெளிநாடுகளில் உள்ள நகர உட்கட்டமைப்பு மற்றும் நவீன தொழில்நுட்பங்களை அறிந்து, அவற்றை தமிழ்நாட்டில் செயல்படுத்திடவும், வெளிநாடுவாழ் தமிழர்கள் மற்றும் பிற முதலீட்டாளர்களிடமிருந்து தமிழ்நாட்டிற்கு அதிக அளவில் முதலீடுகளை ஈர்த்திடவும், இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் துபாய் ஆகிய நாடுகளுக்கு 28.8.2019 முதல் 10.9.2019 வரை சுற்றுப் பயணம் மேற்கொண்டார்கள்.

அதன்படி, இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் துபாய் நாடுகளுக்கு அரசுமுறை பயணமாக சென்று, தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்த்து இன்று (10.9.2019) சென்னை திரும்பிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களை, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. ஜி.கே. வாசன் அவர்கள் தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு தனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார்.

• • • • •

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**